**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை - 2019**

---

## 1. அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாக மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணங்கியிருக்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 36 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் ஒரு வகுதியாக ஒரே தடவையில் மீள்கணிப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், சபையின் முதலீடு மற்றும் முதலீடு அற்ற ரூபா 1,356,028,570 தொகையான காணிகளை மேம்படுத்துதல்கள் மற்றும் கட்டிடங்களில் ரூபா 1,206,510,768 தொகையான ஒரு பகுதி மாத்திரம் மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | நியமங்களுக்கு இணங்க 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும். | மீள் கணிப்பீட்டின் போது உரிய சொத்துக்களின் வகுதி மீள் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 52 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்திற்கான பெறுமானத்தேய்வு விகிதத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியின் இறுதியில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 2004 இலிருந்து 2008 வரை கொள்வனவு செய்த ரூபா 5,035,965 கிரயமான சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 1,018,290 ஆக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. | திரண்ட பெறுமதியையும் உள்ளடக்கி தேவையான சரிசெய்தல் பதிவுகள் 2020 ஆம் ஆண்டிற்காக விரைவாக கணக்கீடு செய்யப்பட்டு நியமத்திற்கு இணங்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஒரு சொத்தின் எச்சப் பெறுமதியானது அதன் இயலளவு பெறுமதியை மிகைக்காதிருத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது சொத்துக்களை வகைப்படுத்தும் போது ஏற்பட்ட தவறை நீக்குவதற்காக சரியான சொத்துக்கள் கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. அதில் ரூபா 4,241,896 கிரயமான இயந்திரங்களின் தேறிய பெறுமதி ரூபா 2,094,150 ஆக இருந்த போதிலும், ரூபா 852,004 ஆகவும் ரூபா 875,500 கிரயமான தளபாட உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 858,632 ஆக இருந்த போதிலும், ரூபா 437,750 ஆகவும் அலுவலக உபகரணங்களில் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,663,028 இனல் அலுவலக உபகரணக் கணக்கின் தேறிய பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | விபரமான பட்டியல் கிடைக்காததனால் ஒவ்வொரு சொத்துக்களின் பெறுமதியை தனித்தனியாக தெரிந்து கொள்ளாததனாலும் உரிய மாற்றல் குழப்ப நிலை உருவாக்கியிருந்தது எனவும் 2020 நிதிக் கூற்றுக்களின் மூலம் இது சரிசெய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | சொத்துக்கள் பதிவேடு நாளதுவரை யாக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 91,500,000 பெறுமதிக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்ட கைத்தொழில் பேட்டை காணிக்காக ரூபா 4,575,000 வருடாந்த பெறுமானத்தேய்வு கணிக்கப்பட்டிருந்தது. காணிக்காக பெறுமானத்தேய்வு செய்யப்படுவதில்லை என்பதனால் அப்பதிவினை நீக்குவதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் மூலம் இதனை சரிசெய்வதாக தெரிவிக்கப்பட்டது. | காணிக்காக பெறுமானத்தேய்வு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |
| (இ) | கைத்தொழில் பேட்டையின் உள்ளக வீதி வடிகாண் மற்றும் வேலிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்காக பொறியியல் பிரிவினால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு சான்றுப்படுத்திய வேலைகளின் பெறுமதி ரூபா 16,077,084 ஆக இருந்த போதிலும், நடைமுறை வேலையாக ரூபா 16,591,875 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க ரூபா 514,791 ஆல் நடைமுறை வேலைக்கணக்கு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஒப்பந்தக்காரரின் இறுதிப் பட்டியலின் பிரகாரம் “செய்த வேலைக்காக” வழங்கப்படுகின்ற பெறுமதியை கணக்கீடு செய்தல் பொருத்தமான கணக்கீட்டு பரிகாரம் எனத் தெரிவிக்கப்பட்டது. | சான்றுப்படுத்தப்பட்ட வேலைகளின் பெறுமதிக்கு கணக்குகள் பேணப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய கொள்வனவுகளுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 30,891,311 தொகையான முற்கொடுப்பனவு முற்பணங்களில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 13,050,627 பணத்தை அறவீடு | மீதிகளைத் தீர்த்து வைக்கும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. | பெற வேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு முடியாதிருந்தது. இப்பணத்தில் ரூபா 11,676,251 இற்கு ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருந்தது. | | |
| (ஆ) | 2009 மற்றும் 2017 காலப்பகுதி தொடர்பாக ரூபா 12,495,681 தொகையான கைத்தொழில் பேட்டைகளிலிருந்து அறவிட வேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான மீதிகளை விரைவாகத் தீர்த்து வைக்குமாறும் இல்லையாயின் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | அறவிட வேண்டிய மீதியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 2(11) ஆம் பந்தி | உரிய அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 60 வயதினை மிகைத்த உத்தியோகத்தர் ஒருவர் சபையின் மனித வளங்கள் பணிப்பாளர் பதவிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டு 2016 மே மாதத்திலிருந்து 2019 பெப்ரவரி வரை ரூபா 2,989,008 தொகை சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இந்நியமனம் சம்பந்தமாக 1994 இன் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது மோசடி குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் கீழான புலனாய்வு தொடர்ந்தும் இடம்பெற்று வருவதனால் நியமனம் மற்றும் அது தொடர்பாகச் செலுத்தப்பட்ட படிகள் சம்பந்தமாக சபையினால் எடுக்க வேண்டியுள்ள நடைமுறைகள் எதிர்காலத்தில் தெரிவிக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் 60 வயதினை மிகைத்த ஒரு உத்தியோகத்தரின் சேவையைப் பெற்றுக் கொள்ளும் போது அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டில் அங்கீகரித்த சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகைமைகளை அடைந்து கொள்ளாத ஒரு உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் | இந்த உத்தியோகத்தரை சேர்த்துக் கொண்ட சந்தர்ப்பத்தில் ஆரம்பத் தகைமை அடைந்து கொள்ளப் பட்டிருக்காததனால் அவரின் நன்நடத்தை | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை சேவையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிப்பாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு 2015 யூன் 26 ஆந் திகதியிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 7,206,363 சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | காலம் முடிவடைந்திருந்தும் சேவையில் நிரந்தரமாக்குவது கைவிடப்பட்டு சம்பள ஏற்றங்கள் வழங்குவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (இ) | 2013 ஆம் ஆண்டில் அங்கீகரித்த சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்காத ஒரு உத்தியோகத்தர் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பணிப்பாளர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டு 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 9,221,341 சம்பளமும் படிகளுமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர் பதவிக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்காத காரணத்தினால் நியமனத்தை நிரந்தரமாக்க முடியாதிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்படவில்லை என்பது. | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை சேவைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,828,307 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 3,464,789 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 11,293,096 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் குறைவடைதல் மற்றும் நிருவாகச் செலவு அதிகரித்தல் பிரதானமாக காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

| | 2019 | 2018 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| உடைந்த இரும்பு வருமானம் | 241,855,519 | 325,738,660 |
| ஏனைய வருமானம் | 141,692,121 | 139,761,899 |
| மொத்த வருமானம் | 383,577,640 | 465,560,559 |
| நிருவாகச் செலவுகள் | 583,118,229 | 550,531,946 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சபையின் மொத்த வருமானம் 18 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. ரூபா 383,577,640 தொகையான மொத்த வருமானத்தில் 63 சதவீதம் அதாவது ரூபா 241,855,519 தொகை உடைந்த இரும்புகளை விற்பனை செய்ததிலிருந்து

பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானமாக இருந்ததுடன் சபையின் பிரதான குறிக்கோள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாடுகளுக்கான பங்களிப்பு 37 சதவீதம் அதாவது ரூபா 141,692,121 தொகையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

| | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் | 1:1.3 | 1:1.5 |
| மொத்த இலாப விகிதம் | 31 | 30.5 |
| தேறிய இலாப விகிதம் | (2) | 0.7 |

மொத்த இலாப விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றின் காணப்பட்டிருந்தும் தேறிய இலாப விகிதம் 2 சதவீத மறைப் பெறுமதியாக இருப்பதற்கு ரூபா 32,786,283 ஆல் நிருவாக செலவு அதிகரித்திருந்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கையில் கைத்தொழில் செயற்பாடுகளை இயந்திரமயமாக்குதல், விளைதிறனை மேம்படுத்துதல், தரத்தினை உயர்த்துதல், மனித தவறுகளைக் குறைத்தல், கைத்தொழில் தேவைப்பாடுகளுக்கு வலுவூட்டுதல் முதலியவற்றை குறிக்கோளாகக் கொண்டு ரோபோ தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்காக அமப 16/1424/723/039 ஆம் இலக்க 2016 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் போது அங்கீகாரத்தைப் பெற்று சபையின் ஒரு கட்டிடத்தில் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. ரூபா 40 மில்லியன் பெறுமதியுள்ள 04 ரோபோ இயந்திரங்களை 2017 ஏப்ரல் மாதத்தில் பொருத்துதலை உள்ளடக்கி அன்றிலிருந்து 2019 திசெம்பர் 31 வரை ரூபா | இச்செயற்திட்டம் வேறு ஒரு நிறுவனத்திற்கு வழங்கக்ப்படாதிருக்குமாக விருந்தால் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் முழுமையான பங்களிப்பில் எதிர்பார்த்து குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான வாய்ப்புக் காணப்பட்டது என்பது. | செயற்திட்டம் வேறு ஒரு அமைச்சிற்கு ஒப்படைக்கப் பட்டுள்ளதனால் சிபார்சினை வழங்க முடியாதுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 133,033,293 செலவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2018 திசெம்பர் வரை ஒரு கம்பனியாக பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் தேவையான பதவியணியினர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இச்செயற்திட்டத்தின் தோல்வியின் அடிப்படையில் 2018 திசெம்பர் 28 ஆந் திகதிய 2013/14 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் இது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. | | |
| (ஆ) | றோபோ தொழில்நுட்ப நிலையத்திற்கான அமைச்சு நிதிஏற்பாட்டின் அடிப்படையில் ரூபா 35,913,582 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட சீஎன்சீ மில் இயந்திரம் மற்றும் லேத் இயந்திரம் நிலையம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு வெளியே முறையாக ஒப்படைக்கப்படாது பொறியியல் பிரிவின் கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு சபையின் உழைப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் உரிமையை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை பௌதீக ரீதியாக அகற்றும் வரை பொருளாதார ரீதியான உழைப்பிற்காக அச்சொத்துக்கள் விளைவற்று இருத்தல் / செயற்படாதிருத்தல் தவிர்க்கப்பட்டது என்பது. | உரிமையை பொறுப்பேற்று சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ள 1.2953 ஹெக்டர் அளவான காணியினதும் பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள 25 ஏக்கர் 9 ரூட் 186.5 பேர்சஸ் அளவான | சட்டரீதியான உரிமை இல்லாததனால் தலைமை அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள புதிய தள சுற்றாடலில் | காணியில் சட்டரீதியான உரிமையைப் பொறுப்பேற்று ஆக்கபூர்வமான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காணியினதும் உரிமையை சபைக்குச் சொந்தமாக்கிக் கொள்வதற்கு முடியாதிருந்தது. இந்த ஆதனங்களுக்கு அதிகளவிலான வர்த்த பெறுமதி இருந்தும் பெறுமதியைக் கணித்து சபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு இன்று வரை முடியாதிருந்தது. தலைமை அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணியில் புதிய தள கட்டிடம் அமைந்துள்ள காணியில் ¾ அளவானவற்றில் தனிப்பட்ட வியாபாரம் நடாத்தப்பட்டு வருகின்றமையும் அவர்களிடமிருந்து எதுவித தளவாடகையோ அல்லது கட்டிட வாடகையோ அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் காணியின் சட்டரீதியான உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு இன்று வரை முடியாதிருந்தது. | செயற்பட்டு வருகின்ற தனியார் வியாபாரங்களிலிருந்து வாடகையை அறவீடு செய்தல் முடியாதுள்ளது எனவும் ஆதனங்களைப் பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | களுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான 18 பேட்டைகளில் 726 மொத்த நிலப் பகுதிகள் காணப்பட்டதுடன் 2019 திசெம்பர் 31 வரையும் 72 நிலப் பகுதிகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டிருக்கவில்லை. இக்காணிகள் பல ஆண்டுகளாக வெறுமையாகக் காணப்பட்டது. 05 பேட்டைகளுக்குரிய கைத்தொழில்ளார்களுக்கும் ஒப்படைக்கப்பட்ட 98 நிலப் பகுதிகளில் 28 நிலப்பகுதிகள் குடியிருப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | தகைமைகளைப் பூர்த்தி செய்த கைத்தொழில்கள் ஸ்தாபிக்கப்படும் வரை அக்கைத்தொழில் களுக்காக காணிகளை வழங்கும் எதிர்பார்ப்பில் கைத்தொழில் பேட்டை வெற்றுக் காணித் துண்டுகள் பேணப்பட்டு வருகின்றன என்பது. | பெற்றுக் கொள்ளப்பட்ட காணிகளிலிருந்து உச்ச அளவு பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 07 பேட்டைகளின் 30 காணித் துண்டுகள் 2008 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிலிருந்து மூடப்பட்டுள்ளதுடன் அக்காணித் துண்டுகளை 2019 திசெம்பர் 31 வரையும் ஏனைய கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குடியிருப்பவர்களை மீண்டும் கைத்தொழில் ஈடுபடச் செய்வதற்கு அல்லது வதிவிடங்களை பயன்படுத்துவதிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. | கைத்தொழிலாளர் களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சபைக்குச் சொந்தமான 18 பேட்டைகளுக்கு மத்தியில் 9 பேட்டைகள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 5,608,802 தொகை நட்டமடைந்திருந்ததுடன் பூஸ்ஸ, பெலியத்த, பத்தேகம, கரந்தெனிய ஆகிய பேட்டைகளின் செலவுகள் மாத்திரம் ரூபா 869,335 ஆக இருந்ததுடன் எதுவித வருமானமும் உழைத்திருக்கவில்லை. | கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பித்தல் தொடக்க குறிக்கோள் என்பதுடன் பேட்டைகள் தொடர்பாக செய்யப்படுகின்ற முதலீடுகளின் அடிப்படையில் கிடைக்கின்ற நலன்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதில்லை எனவும் ஏடுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள பெறுமானத்தேய்வுச் செலவுகள் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து பார்த்து சரிசெய்வதற்கு குறிப்பிட்டுக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. | நட்டமடைகின்ற பேட்டைகளை இலாபம் ஈட்டும் நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | உடைந்த உலோக முகாமைத்துவம் தொடர்பாக 2013 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உடைந்த உலோகங்களை சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு நியாயமான அடிப்படையின் கீழ் பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் போது சபையினால் ரூபா 79,306,352 தொகைக்கு கைத்தொழிலாளர்களுக்கு உடைத்த ட்ரான்ஸ் போமர் விற்கப்பட்டிருந்ததுடன் இதில் | இச்செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 70,069,800 தொகையானது உடைந்த 568 டரான்ஸ்போமர்கள் 09 கைத்தொழிலாளர் களுக்கு மத்தியில் விற்பனை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் உடைந்த உலோகங்கள் சிறிய மற்றும் மத்திய அளவிலான கைத்தொழிலாளர் களுக்கு நியாயமான அடிப்படையின் கீழ் பகிர்ந்தளித்தல் இடம்பெறுதல் வேண்டும். |

22 சதவீதம் ஒரு கைத்தொழிலாளருக்கு உள்ளடங்கலாக மூன்று கைத்தொழிலாளர்களுக்கு 54.6 சதவீதம் அதாவது ரூபா 43,262,400 தொகையும் மிகுதியான 45.4 சதவீதம் அதாவது ரூபா 36,043,952 தொகை 8 கைத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

**3.2 பயன்படுத்தப்படாத, குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்துதல், அழிவுகளைக் குறைத்தல், உற்பத்தி நடைமுறைகளை ஆக்கபூர்வமாக்குதல், உற்பத்திக் கிரயத்தைக் குறைத்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு இறப்பர் இன்ஜெக்ஸன் மோல்டிங் இயந்திரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9,318,026 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 39 கைத்தொழிலாளர்களுக்காகவும் தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறுகின்ற 266 நபர்களுக்காகவும் மாத்திரம் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன. பல நிறுவனங்களுக்கு மாதிரிகள் வழங்கப்பட்டிருந்தும் கட்டளைகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை. அதற்கிணங்க இயந்திரங்களை உச்ச அளவு செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | கைத்தொழிலாளர்களின் பொருட்களை உற்பத்தி செய்யும் விருப்பத்தினை அடிப்படையாகக் கொண்ட வேண்டுதல்களின் பிரகாரம் இந்த இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு கலந்துரையாடப்பட்டு வருகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது. | இயந்திரங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| அமைச்சு நிதியத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட மானியத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 78,876,959 பெறுமதியான 04 ஒப்பந்தங்கள், 03 அரசாங்க நிறுவனங்களுக்கும் ஒரு தனியார் ஒப்பந்தக்காரருக்கும் வழங்கப்பட்டிருந்தன. எனினும், அந்நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்டவாறு வேலைகள் முடிவுறுத்தப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டது. | ஒப்பந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி நிர்மாண நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| கம்பஹா மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 38,139,000 மதிப்பீட்டுத் தொகைக்கு 2017 திசெம்பர் 13 ஆந் திகதி நடைபெற்ற திணைக்கள பெறுகைக் குழுத் தீர்மானத்தின் பிரகாரம் கேள்வி கோருவதற்கு காலம் இல்லை என்பதனால் கட்டிடத் திணைக்களத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. வழங்கப்பட்ட மதிப்பீட்டில் ரூபா 11,656,000 (வெட் வரியினையும் நிகழத்தக்க செலவுகளையும் தவிர்த்து) பெறுமதிக்கு தளமாடியை மாத்திரம் நிர்மாணிப்பதற்கு சிபார்சுகள் வழங்கப்பட்டது. அதற்கிணங்க 2017 திசெம்பர் 19 ஆந் திகதி கட்டிடத் திணைக்களத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தும் கட்டிடத் திணைக்களத்தால் தனிப்பட்ட ஒரு ஒப்பந்த நிறுவனத்திற்கு ரூபா 26,379,710 வெட் வரியற்ற தொகைக்கு ஒப்பந்தத்தை வழங்குதல் 2019 சனவரி 21 ஆந் திகதி வரை தாமதமடைந்திருந்தது. கட்டிடத்தின் தோற்றத்தை மாற்றுவதற்கு சபையின் முகாமைத்துவம் எடுத்த தீர்மானத்தின் காரணமாக | நிர்மாண விடயம் மாற்றமடைந்ததன் காரணமாக கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கையை மேற்கொண்ட கட்டிடத் திணைக்களத்தின் உப ஒப்பந்தக்காரர் நிர்மாண நடவடிக்கைகளிலிருந்து நீங்கியிருந்தார். கட்டிடத் திணைக்களம் சபையுடன் இணைந்து தளமாடியின் மிகுதி வேலைகளை முடிவுறுத்தும் தீர்மானத்திற்கு வந்திருந்தது. | ஒப்பந்த நிறுவனத்துடன் கலந்துரையாடி நிர்மாண நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் நிதிஏற்பாடு உள்ளது என்பதற்கும் தேவைப்பாட்டிற்கு இணங்கவும் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

முற்பணமாக ரூபா 2,914,000 மற்றும் ரூபா 2,964,640 தொகைகள் விலைப்பட்டியல்களின் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் கேள்விகளை ஒப்படைத்து 2 ½ ஆண்டுகள் கடந்திருந்தும், இன்று வரை இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக உத்தேச அத்திவாரம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சபையிடம் போதியளவு நிதி ஏற்பாடுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் கேள்விகள் கோரப்படாது ஒரு அரசாங்க நிறுவனமாயினும், மிகவும் அதிக விலையின் கீழ் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத் திணைக்களத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைபெழுத்திடப்படவில்லை.

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வியாபார மேம்பாட்டு உத்தியோகத்தர் பதவியானது சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ள பதவியான போதிலும் உயர் நீதிமன்றத்தின் SC/FR64/2009 ஆம் இலக்க வழக்கு தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு 55 உத்தியோகத்தர்களுக்கு தொழில் முயற்சி மேம்பாட்டு முகாமையாளராக மத்திய முகாமைத்துவ மட்டம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நியமனத் திகதியான 2016 யூன் 23 ஆந் திகதியிலிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அண்ணளவாக ரூபா 117,895,454 பணம் மொத்த சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | கனிஸ்ட அல்லது மத்திய முகாமையாளர் மட்டத்தில் அமர்த்துமாறு வழக்குத் தீர்ப்பில் தரப்பட்டுள்ளதாகவும் உத்தேச பதவியணியினர்களை மீளமைப்புச் செய்யும் திட்டத்தின் மூலம் இச்சிக்கலை நிவர்த்தி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. | பதவியினை வழங்குவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இப்பதவிக்காக முகாமைத்துவ சேவைகள், திணைக்களத்தின் அங்கீகாரம 2020 யூன் வரையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையின் அங்கீகரித்த பதவியணியினர் 714 ஆக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான பதவியணியினர் 482 இற்கும் 534 இற்கும் இடைப்பட்டு இருந்ததன் காரணமாக தேவையான அளவிற்கு பதவியணியினர் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தினால் கைவிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு சுற்றறிக்கை நீக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. | தேவைப்பாட்டின் பிரகாரம் பதவியணியினர் திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | நிருவாக மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் பதவிகள் இரண்டில் முறையே 2012 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளிலிருந்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தும் ஆட்சேர்ப்புச் செய்ய முடியாதிருந்தது எனவும் அரசாங்கத்தினால் கைவிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு சுற்றறிக்கை நீக்கப்பட்டதன் பின்னர் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையின் பொறியியல் பிரிவில் 78 பதவிகள் அளவிலான ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் பொறியியல் சேவைகளை முறைப்படியாக அமுல்படுத்துவதற்கு முடியாது காணப்பட்ட சந்தர்ப்பத்திலும் பணிப்பாளர் பொறியியலாளரை ஒரு அரசாங்க கம்பனிக்கு தற்காலிகமாக 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து விடுவிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | லங்கா மினரல் சேன்ட் கம்பனிக்காக பணிப்பாளர் பொறியியலாளரின் சேவையை மேலும் அக்கம்பனிக்கு வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பணிப்பாளர் பொறியியலாளரின் சேவையை முழுக் காலத்திற்கு பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும். |

## 3.6 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் பிரகாரம் காணப்படுகின்ற உற்பத்திக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஒரு செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அதனை 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் 2 கட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது எனவும் முதலாம் ஆண்டின் போது மாவட்ட மட்டத்தில் காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 500 கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற சிக்கல்களை தீர்த்து வைப்பதற்காக உதவிகள் வழங்கி அக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் என காட்டப்பட்டிருந்தது. எனினும், 2019 ஆம் ஆண்டில் சபையினால் தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இச்செயற்திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br>மொத்த வருமானத்தில் 70 சதவீதம் அளவான உடைந்த பொருட்களை கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல் பிரதான வருமான மார்க்கமாக இருந்தும் இச்செயற்திட்டம் 2019 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | ஆண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட அனைத்து செயற்பாடுகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |